# ந. சுப்புரெட்டியாரின் படைப்புகள் : கலையும் கருத்தியலும்



பதிப்பாசிரியர்கள்
**முனைவர் க. முருகேசன்**
**முனைவர் சு. இராமலிங்கம்**

# ந. சுப்புரெட்டியாரின் படைப்புகள் : கலையும் கருத்தியலும்

(பன்னாட்டு ஆய்வுக் கருத்தரங்கம்)

| | | |
|---|---|---|
| பதிப்பாசிரியர்கள் | : | **முனைவர் க. முருகேசன்**<br>**முனைவர் சு. இராமலிங்கம்** |
| பதிப்புரிமை | : | பதிப்பாசிரியர்கள் |
| முதற்பதிப்பு | : | ஜூலை, 2016 |
| வெளியீடு | : | **தமிழ்த்துறை**<br>**கொங்குநாடு கலை அறிவியல் கல்லூரி**<br>கோயம்புத்தூர் - 641029. |
| கணினி அச்சாக்கம் | : | **பிரடாக் பிரிண்ட்,**<br>476 பூமாதேவி கோவில் அருகில்<br>கவுண்டர் மில்ஸ் (அஞ்சல்)<br>கோயம்புத்தூர் - 29.<br>அலைபேசி : 98432 73994, 91505 91017 |
| பக்கங்கள் | : | XVI + 416 = 432 |
| விலை | : | உரூ. 350/- |

**ISBN : 978 - 81 - 932327 - 8 - 1**

# International Conference on Art and Ideology of Dr. N. Subbu Reddiar

| | | |
|---|---|---|
| Editor's | : | **Dr. K. Murugesan.**<br>**Dr. S. Ramalingam** |
| Copyright's | : | Editors |
| First Edition | : | July, 2016 |
| Published | : | **Department of Tamil**<br>**Kongunadu Arts and Science College**<br>Coimbatore - 641 029. |
| Computer Printing at | : | **Prdag Print**<br>476/1, Near Boomadevi Kovil<br>G.N. Mills (Po), Coimbatore - 29.<br>Cell : 98432 73994, 91505 91017 |
| Pages | : | XVI + 416 = 432 |
| Prize | : | **Rs. 350/-** |

61. இரா. வாணிபிரபா 312
ந.சுப்புரெட்டியார் பார்வையில் சகோதரத்துவம்

62. முனைவர். மு. ருக்மணி 316
ந.சுப்புரெட்டியாரின் உணர்ச்சியின் தத்துவம்

63. வே. அம்சவேணி 321
ந.சுப்புரெட்டியார் "சைவ சமய விளக்கு" நூலில்
சித்தாந்தக் கூறுகள்

64. முனைவர் ச. அரிச்சந்திரன் 326
ந. சுப்புரெட்டியார் பார்வையில் கவிதைப் படைப்பாக்கம்

65. முனைவர் ஆ. சரவணன் 331
ந. சுப்புரெட்டியார் பார்வையில் 'அர்ச்சிராகதி'

66. முனைவர். நா. கீதா 335
அர்த்த பஞ்சக ஞானம்

67. முனைவர் எஸ். குமரன் 340
ந. சுப்பு ரெட்டியார் உணர்த்தும் தொல்காப்பியம்
காட்டும் வாழ்க்கை

68. முனைவர் த.பிரியா 345
ந.சுப்புரெட்டியார் உள்ளத் தெருக்களில் உலா வரும்
கவிதையனுபவம்

69. மு. ஷாஜஹான் 350
ந.சுப்புரெட்டியாரின் பார்வையில் ஐந்திணை நெறிகளும்
இடந்தலைப்பாடும்

70. இரா. மாலினி 354
ந.சுப்புரெட்டியார் பார்வையில் பாஞ்சாலி சபதக்
கதை மாந்தர்கள்

71. முனைவர் இரா. மணிமேகலை 359
சைவசித்தாந்தம் ஓர் அறிமுகம் - நூல் ஆய்வுரை

72. முனைவர் ச. கவிதா 365
பாரதி இயல் ஆய்வில் பேராசிரியர்
ந.சுப்புரெட்டியாரின் பங்களிப்பு

73. முனைவர் கு. முத்துக்குமார் 370
ந. சுப்புரெட்டியாரின் மெய்யியல் பார்வை

74. வெ. மைதிலி 376
ந. சுப்புரெட்டியாரின் கவிதைச் சிந்தனைகள்

75. முனைவர் சு. சதீஷ்குமார் 379
ந.சுப்புரெட்டியார் காட்டும் திருக்கோயில் தத்துவம்

# 62. ந.சுப்புரெட்டியாரின் உணர்ச்சியின் தத்துவம்

முனைவர். மு. ருக்மணி
*உதவிப்பேராசிரியர், தமிழ்த்துறை,*
*கொங்குநாடு கலை அறிவியல் கல்லூரி,*
*கோயம்புத்தூர் - 641 029.*

## முன்னுரை

ஒரு ஜீவநதியின் தொடர்ச்சியைப் போல் இலக்கியத்தின் பயணமும் தொடர்ச்சியானது. கவிதையின் வரலாற்றின் தேக்கங்கள் மறைந்து காலத்தின் எதிரொலியாய்ப் புதுக்குரல்களையும் கேட்க முடிகின்றது. புதிய பாதைகள், புதிய பயணங்கள், புதியபார்வைகள் கவிதைகளிலும் நிகழ்ந்து கொண்டே இருக்கின்றன. ந.சுப்புரெட்டியர்க்கு கவிதையைப் பற்றிய திடமான சிந்தனை இருந்தது என்பதை அவரது கவிதையனுபவம் வாயிலாக அறிந்து கொள்ள முடிகிறது. ‘கவிதைக்குப் பல அம்சங்கள் உண்டு. ஆனால் அவைகளின் கூட்டுறவு மட்டும் கவிதையை உண்டாக்கி விடாது. கவிதையின் முக்கிய பாகம் அதன் ஜீவசக்தி. கவிதை மனிதனின் உணர்ச்சியால் பிறந்த உண்மை. உள்ளப்பாற்கடலில் பிறந்த அமிர்தகலசம். மனித உள்ளம் யதார்த்த உலகத்துடன் ஒன்றுபட்டோ பிரிந்தோ கண்ட கனவு. அது உள்ள நெகிழ்ச்சியிலே உணர்ச்சி வசப்பட்டு வேகத்துடன் வெளிப்படுகிறது அது தான் கவிதை’. கவிதையின் அனுபவத்தைச் சொற்களால் வரையறைப்படுத்தி அளந்து காட்ட இயலாது.

உடலும் உள்ளமும் நன்னிலையில் உறவு கொண்டிருந்தால் தான் நல்லுணர்ச்சிகள் தோன்றி கவிதையை அனுபவிப்பதற்குத் துணைசெய்யும் உணர்ச்சிகளின் திரட்சியே பற்றுக்கள். பற்றுக்களே நம்மைக் கவிதைகளைப் படிக்கத் தூண்டுபவை. உணர்ச்சிகளே மீப்பண்புகளுக்கும் காரணமாக இருப்பவை. நாம் கவிதையைப் படித்துத் துய்ப்பது தூண்டல்-துலங்கல் தத்துவத்தை அடிப்படையாகக் கொண்டது. வெளியுலகிலுள்ள பொருள்கள் நம் புலன்களைத் தூண்டுவதால்தான் நாம் செய்திகளை அறிந்து கொள்கின்றோம். இதைத் தவிர நமக்குக் கருத்து நிலைச் செயல்களாலும் தூண்டல்கள் ஏற்படுகின்றன. ஒரு கவிதையைப் படிக்கும்பொழுது இவ்வகைத் தூண்டல்களே நமக்கு ஒருவித கிளர்ச்சியைத் தரும். வாழ்க்கையனுபவத்தில் இவ்வுணர்ச்சிகள் ஏற்படுங்கால் இத்தகைய உடல் மாறுதல்கள் ஏற்படுகின்றன என்பது உளவியல் காட்டும் உண்மை. வெகுளிச்சுவை, அவலச்சுவை, மருட்கைச் சுவை போன்ற சுவைகள் உள்ள கவிதைகளைப் படிக்கும்பொழுது அவற்றால் பெறும் செய்திகள் பெரும் மூளையில் பல்வேறு எண்ணச் [illegible]